## முதன்மை மாவட்ட நீதிமன்றம், சிறப்பு நீதிமன்றம் விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்.

அரசு தரப்பு சாட்சி 1(LW1) வாக்குமூலம்

## சிறப்பு வழக்கு எண். 7/2021

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | - | நிர்மலா | வட்டம் | - | |
| க/பெ | - | குப்பன் | சாதி | - | |
| வயது | - | | மதம் | - | |
| கிராமம் | - | | தொழில் | - | |

இன்று 16.10.2023, 1969ம் ஆண்டு மத்திய சட்டம் 44ன் படி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

(எதிரி ஆஜர்.)

**முதல் விசாரணை**

நான் தற்போது துத்திபட்டு கிராமத்தில் வசிக்கிறேன். எனது கணவர் பெயர் குப்பன். ஆஜர் எதிரியை தெரியும். எனது கணவருடன் பிறந்தவர் தம்பி ஏழுமலை, தங்கை உஷா ஆகியோர் உள்ளார்கள். என் குடும்பத்திற்கு மொத்தம் 2 ஏக்கர் நிலம் உள்ளது. அதில் என் கணவருக்கு 1 ஏக்கர் நிலம் கொடுக்கப்பட்டது. எனது கணவரின் தம்பி ஏழுமலை நிலத்தை நானே போகியத்திற்கு பயிர் செய்து வருகிறோம். நிலத்தில் ஆடு,மாடு வைத்துள்ளோம். வயலில் மாலை 7 மணி வரை வேலை செய்துவிட்டு இரவு 8 மணிக்கு தான் வீட்டிற்கு வருவோம். பின்பு சாப்பிட்டுவிட்டு என் கணவர் மீண்டும் கழனிக்கு ஆடு,மாடுகளை பார்ப்பதற்கு சென்றுவிடுவார். ஆஜர் எதிரிக்கும் என் கணவருக்கும் நிலம் சம்மந்தமாக சண்டை வந்தது. பிறகு அவர் திட்டினார். கொலை மிரட்டல் விடுத்தார். 2 வருடத்திற்கு முன்பு 10 வது மாதம் தேதி தெரியவில்லை. கழனிக்கு ஆடு, மாடு மேய்க்க போனார். என் கணவர் கழனிக்கு போகும் வழியில் மோட்டாரை

இயக்கும் இடத்தில் மின்சார ஒயரை போட்டுவைத்திருந்தார்கள். பிறகு ஏழுமலையின் மனைவி என் கணவர் அதில் சிக்கிக்கொண்டார் என்று தகவல் சொன்னார். நாங்கள் சென்று பார்த்த போது அவர் இறந்துவிட்டார். காலில் கம்பி அறுத்த காயம் இருந்தது. பிறகு அங்கு மின்சாரம் இருக்கிறது பக்கத்தில் போக கூடாது என்று சொல்லிவிட்டார்கள். பின்பு போலிசார் வந்து மின்சார வாரியத்திலிருந்து மின்சாரத்தை எடுக்க சொல்லி என் கணவரை ஆம்புலன்சில் எடுத்து சென்றார்கள். இது சம்மந்தமாக நாங்கள் அனந்தபுரம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். புகாரில் உள்ள கைரேகை என்னுடையது தான் அது அதசாஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. முதல் தகவல் அறிக்கையில் உள்ள கைரேகையும் என்னுடையது தான் அது அதசாஆ2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சாட்சி தற்போது நான் கையெழுத்து போட்டேன் கையெழுத்து போட்டு புகாரை கொடுத்தேன். அதற்கு பிறகு அதில் கைரேகை தான் உள்ளது அது எப்படி வந்தது என்று தெரியாது. நான் கைரேகை வைக்கவில்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிதரப்பில் வழக்கறிஞர் ஆஜர் இல்லை. எதிரியிடம் குறுக்குவிசாரணை செய்கீறீரா என்று கேட்டதற்கு இல்லை என்கிறார். இலவச வழக்கறிஞர் வைத்து தரட்டுமா என்று நீதிமன்றத்தில் கேட்கப்பட்டது. வேண்டாம் எனக்கு வசதி உள்ளது. வழக்கறிஞர் இருக்கிறார் என்கிறார். எனவே எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.

Sd/- R.Poornima,
Principal Sessions Judge,
Villupuram.

**முதன்மை மாவட்ட நீதிமன்றம், சிறப்பு நீதிமன்றம் விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்.**

அரசு தரப்பு சாட்சி 2(LW2) வாக்குமூலம்

**சிறப்பு வழக்கு எண். 7/2021**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | - | செல்வதுரை | வட்டம் | - | |
| க/பெ | - | சீனிவாசன் | சாதி | - | |
| வயது | - | | மதம் | - | |
| கிராமம் | - | | தொழில் | - | |

இன்று 16.10.2023, 1969ம் ஆண்டு மத்திய சட்டம் 44ன் படி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

(எதிரி ஆஜர்.)

**முதல் விசாரணை**

நான் தற்போது துத்திபட்டு கிராமத்தில் வசிக்கிறேன். வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. ஆஜர் எதிரியை தெரியும். இறந்துபோன குப்பனை தெரியும். அவர் எப்படி இறந்தார் என்று தெரியாது.

மேற்சொன்ன சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி குறுக்குவிசாரணை செய்ய அரசுத்தரப்பில் அனுமதி வேண்டப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது.

போலிசார் விசாரணையில் எங்கள் ஊரை சேர்ந்த காசிநாதனுக்கு இரண்டு பிள்ளைகள் என்றும் அதில் ஒருவர் குப்பன் என்றும் மற்றொருவர் ஏழுமலை என்றும் அவர்களுக்கு இரண்டு ஏக்கா் நிலம் உள்ளது என்றும் அதனை அண்ணன் தம்பி இருவருக்கும் ஆளுக்கொரு ஏக்கா் பிரித்து கொடுத்ததாகவும் இறந்துபோன குப்பன் தனது தம்பி ஏழுமலை நிலத்தை சேர்த்து பயிர் செய்ததாகவும் அந்த நிலத்தில் ஆடு, மாடுகளை வைத்து வளர்த்ததாகவும் தனது நிலத்தில் வேலை செய்துவிட்டு இரவு சுமார் 7 மணிக்கு வீட்டிற்கு வந்து சாப்பிட்டுவிட்டு மீண்டும்

தனது நிலத்திற்கு ஆடு,மாடுகளை பார்த்துக்கொள்ள செல்வது வழக்கம் என்றும் அதேபோல் 26.10.2020ல் இரவு சுமார் 9.30 மணியளவில் தனது நிலத்திற்கு குப்பன் சென்றதாகவும் மறுநாள் 27.10.2020ல் வீட்டிலிருந்த அசா.1க்கு அவரது கணவர் குப்பன், சுப்பிரமணி மற்றும் கோவிந்தன் ஆகியோர் நிலத்திற்கு நடுவில் நெற்பயிர் செய்துள்ள வரப்பின் குறுக்கே யாரோ கட்டியுள்ள கம்பியில் அடிபட்டு இறந்துகிடந்ததாக தகவல் கேட்டு சென்று பார்த்த போது சம்பவ இடத்தில் மின் கம்பத்திலிருந்து ஒயர் மூலம் மின்சாரத்தை பாய்த்துவைத்தருந்ததை பார்த்தாகவும் அதில் மாட்டி குப்பன் அதே இடத்தில் கவிழந்த நிலையில் கீழே விழுந்து இறந்துகிடந்தார் என்றும் அதனை நானும் இன்னும் சிலரும் பார்த்ததாகவும் அப்போது குப்பன் மனைவி நிர்மலா, குப்பனின் தம்பி ஏழுமலை ஆகியோர்கள் இருந்தார்கள் என்றும் அங்கு அந்த லைன் போடவேண்டிய அவசியம் இல்லை என்றும் மின்சாரமானது 495/023/860 கம்பத்திலிருந்து யாரோ வேண்டுமென்றே லைன் வைத்ததை குப்பன் அதை கவனிக்காமல் வந்து மிதித்ததால் இறந்துள்ளார் என்றும் அது சம்மந்தமாக குப்பன் மனைவி நிர்மலா புகார் கொடுத்ததாகவும் பின்னிட்டு ஆஜர் எதிரிதான் மின்சாரத்தை வைத்தார் என்று போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரியும் நானும் ஒரே ஊர்காரர்கள் என்பதால் எதிரியை காப்பாற்றவேண்டி பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/- R.Poornima,
Principal Sessions Judge,
Villupuram.

**முதன்மை மாவட்ட நீதிமன்றம், சிறப்பு நீதிமன்றம் விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்.**

அரசு தரப்பு சாட்சி 3(LW5) வாக்குமூலம்

**சிறப்பு வழக்கு எண். 7/2021**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | - | பொன்னுசாமி | வட்டம் | - | |
| க/பெ | - | ரத்தினம் | சாதி | - | |
| வயது | - | | மதம் | - | |
| கிராமம் | - | | தொழில் | - | |

இன்று 16.10.2023, 1969ம் ஆண்டு மத்திய சட்டம் 44ன் படி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

(எதிரி ஆஜர்.)

முதல் விசாரணை

நான் தற்போது சித்தரசூர் கிராமத்தில் வசிக்கிறேன். ஆஜர் எதிரியை தெரியும். இறந்துபோன குப்பனை எனக்கு தெரியும். அவர் 26.10.2020ல் இரவு 10,10.30க்கு கழனிக்கு இரப்பு இரைப்பதற்காகவும், ஆடு மாடுகளை பார்த்துக்கொள்வதற்காகவும் போனார். போகும் வழியில் எந்தபக்கம் போனாலும் மாட்டிக்கொள்வது போல் மின்சார வேலி அமைத்துவைத்திருந்தார்கள். அதில் அவர் மாட்டி இறந்துவிட்டார். பிறகு எனக்கு என் தங்கை பெண் லாவண்யா தகவல் சொன்னார். நான் 8.30 மணிக்கு சென்று பார்த்த போது இறந்துபோன குப்பன் மின்சார ஒயரில் சிக்கி தலைகீழாக கவிழந்த நிலையில் இறந்துகிடந்தார். அவருக்கு கையில் முட்டியில் காயம் இருந்தது. நான் திரும்பி வந்துவிட்டேன்.

காவல் துறைக்கு புகார் கொடுத்தார்கள்.

எதிரிதரப்பில் வழக்கறிஞர் ஆஜர் இல்லை. எதிரியிடம் குறுக்குவிசாரணை செய்கீறீரா என்று கேட்டதற்கு இல்லை என்கிறார். இலவச வழக்கறிஞர் வைத்து தரட்டுமா என்று நீதிமன்றத்தில் கேட்கப்பட்டது. வேண்டாம் எனக்கு வசதி உள்ளது. வழக்கறிஞர் இருக்கிறார் என்கிறார். எனவே எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.

Sd/- R.Poornima,
Principal Sessions Judge,
Villupuram.

## முதன்மை மாவட்ட நீதிமன்றம், சிறப்பு நீதிமன்றம் விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்.

அரசு தரப்பு சாட்சி 4(LW7) வாக்குமூலம்

## சிறப்பு வழக்கு எண். 7/2021

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | - | ரமேஷ் | வட்டம் | - | |
| க/பெ | - | சிங்காரம் | சாதி | - | |
| வயது | - | | மதம் | - | |
| கிராமம் | - | | தொழில் | - | |

இன்று 16.10.2023, 1969ம் ஆண்டு மத்திய சட்டம் 44ன் படி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

(எதிரி ஆஜர்.)

### முதல் விசாரணை

நான் தற்போது துத்துபட்டு கிராமத்தில் வசிக்கிறேன். சுமார் 3 வருடத்திற்கு முன்பு தேதி மாதம் ஞாபம் இல்லை. நான் வீட்டிலிருந்து கழினிக்கு சென்றேன். அப்போது கழனியில் கும்பளாக இருந்தார்கள். அப்போது குப்பன் இறந்துகிடந்தார். போலிசார் அந்த இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார். அதில் நானும் எனது தம்பி சேகர் என்பவரும் கையொப்பம் இட்டோம். பார்வை மகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது. அது அதசாஆ3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடைய தம்பி சேகருடையது. போலிசார் அந்த இடத்திலிருந்து கட்டுகம்பி, சிகப்பு நிற ஒயரை கைப்பற்றினார்கள். சிவப்பு ஒயர் சாபொ.1, கட்டுகம்பி சாபொ2 ஆகவும், கவையுடன் கூடிய கம்பி சுற்றிய முள் குச்சி ஒன்று சாபொ.3 வரிசையாகவும்,

நொனாங்குச்சி ஒன்று சாபொ.4 ஆகவும் ஆகியவற்றையும் கைப்பற்றுதல் கைப்பற்றினார்கள். அந்த மகசர் அதசாஆ4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னை போலிசார் விசாரித்தார்கள்.

எதிரிதரப்பில் வழக்கறிஞர் ஆஜர் இல்லை. எதிரியிடம் குறுக்குவிசாரணை செய்கீறீரா என்று கேட்டதற்கு இல்லை என்கிறார். இலவச வழக்கறிஞர் வைத்து தரட்டுமா என்று நீதிமன்றத்தில் கேட்கப்பட்டது. வேண்டாம் எனக்கு வசதி உள்ளது. வழக்கறிஞர் இருக்கிறார் என்கிறார். எனவே எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.

Sd/- R.Poornima,
Principal Sessions Judge,
Villupuram.